# தேன்கூடு கவிதைத் தொகுப்பில் எண்வகை மெய்ப்பாடு
# Eṇvakai Meyppāṭu in The Thenkoodu Poetry Anthology

நவீன் கணேசன் / Navin G Ganeson[1]

இணைப்பேராசிரியர் முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை / Assoc. Prof. Dr. Manonmani Devi M.A.R Annamalai[2]

**Abstract**

This research is dedicated to exploring the psychological nuances embedded in the Tamil poetry compilation '*Thenkoodu*'. The primary objective is to conduct a psychological analysis of the *eṇvakai meyppāṭu*, as revealed in the '*Thenkoodu*' poetry. Published in 2014, '*Thenkoodu*' encompasses a collection of poems categorized under the themes of *iṟaicintaṉai, iyaṟkai, moḻi, ilakkiyam, kalai, peṇmai, tāymai, kātal, nāṭu, iṉam, kumukāyam, palcuvai, vāḻttu, pārāṭṭu,* and *iraṅkal*, with a specific focus on staged poems. Conducted through a qualitative approach, this study relies on a bibliographic research methodology for data collection. The investigation, centred around the theme of *eṇvakai meyppāṭu*, identifies and presents a total of eight instances within the 'Thenkoodu' collection. The findings underscore the presence of *eṇvakai meyppāṭu* in the poetic fabric of '*Thenkoodu*', contributing to a deeper understanding of the psychological dimensions encapsulated in this literary work.

Date of submission: 2023-04-13
Date of acceptance: 2023-06-02
Date of Publication: 2023-12-28
Corresponding author's Name: Mr. Navin G Ganeson
Email: navingganeson@gmail.com

**Keywords:** 'Thenkoodu', Eṇvakai Meyppāṭu, Tamil poetry, Tolkāppiyam, Malaysian Tamil literature

## முன்னுரை

தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்ற அனைத்து நாடுகளிலும் தங்களின் தமிழ் இலக்கியத்தை வளர்த்துள்ளனர். புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் இலக்கிய முயற்சி என்பது கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை எனப் பலதரப்பில் பரவி வேரூன்றியுள்ளது (பவானி - மனோன்மணி தேவி, 2021). மலாயாவிற்கு வருகை புரிந்த தமிழர்கள் படைத்த முதல் இலக்கிய வடிவம் மரபு கவிதையாகும். மலேசியத் தமிழ் இலக்கியத்தில் முதலாவதாகத் தோன்றிய இலக்கியம், கவிதை இலக்கியமாகும். மலேசியாவில் இதுவரை ஏறக்குறைய 500 மரபு கவிதைத் தொகுப்பு வெளியாகியுள்ளன (சாமிக்கண்ணு ஜெபமணி - இராஜேந்திரன், 2020).

அதன் தொடர்ச்சியாக, செ. சீனி

[1]The author is an undergraduate research student in the Department of Modern Language, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Tanjong Malim, Malaysia. navingganeson@gmail.com

[2]The author is an Associate Professor, Department of Modern Language, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Tanjong Malim, Malaysia. manonmanidevi@fbk.upsi.edu.my

நைனா முகம்மது எழுதிய தேன்கூடு எனும் தலைப்பிலான மரபு கவிதைத் தொகுப்புக் கவிதை வளர்ச்சிக்குச் சான்றாக விளங்குகின்றது. இந்நூல் இறைசிந்தனை, இயற்கை, மொழி, இலக்கியம், கலை, பெண்மை, தாய்மை, காதல், நாடு, இனம், குமுகாயம், பல்சுவை, வாழ்த்து, பாராட்டு, இரங்கல், அமைப்புகளுக்கும் மலர்களுக்கும் அளித்தவை, அரங்கேறிய கவிதைகள் எனும் கருப்பொருளின் கீழ் பகுக்கப்பட்டு 2014ஆம் ஆண்டு வெளியீடு கண்டுள்ளது. செ. சீனி நைனா முகம்மது தமது பதினோராம் அகவை முதல்(1958) அறுபத்து மூன்றாம் அகவை வரை எழுதிய மரபு கவிதைகளின் தொகுப்பே, இந்நூலாகும். இதுவே இவரின் முதல் தொகுப்பு நூலாகும் (மனோன்மணி தேவி, 2017). இந்தக் கவிதைத் தொகுப்பில், உளவியல் சார்ந்த பல சிந்தனைகள் காணப்படுகின்றன.

## ஆய்வு நோக்கம்

தேன்கூடு கவிதைத்தொகுப்பில் வெளிப்பட்டுள்ள எண்வகை மெய்ப்பாடுகளை உளவியல் நோக்கில் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முந்தைய ஆய்வுகள்

தமிழ் இலக்கியத்தில் எண்வகை மெய்ப்பாடு குறித்தும் தேன்கூடு கவிதைத் தொகுப்பிலும் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதலில், ‘எண் வகை மெய்ப்பாடுகள்’ எனும் தலைப்பில் தமிழ்ச்செல்வன் 2019ஆம் ஆண்டில் ஆய்வு செய்துள்ளார். இந்த ஆய்வில் தொல்காப்பியர் கூறிய எண்வகை மெய்ப்பாடு குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. உள்ளக்கிளர்ச்சி, மெய்ப்பாடு என்பன ஒன்றிலிருந்து ஒன்று வேறுபாடுடையவையாயினும் அடிப்படையில் தொடர்புடையவை. உணர்ச்சியில் இருந்து உள்ளக்கிளர்ச்சியும், உள்ளக்கிளர்ச்சியில் இருந்து மெய்ப்பாடும் தோன்றுகின்றது என இவ்வாய்வு நிறுவியுள்ளது. ஆக, மெய்ப்பாடும் உளவியிலும் ஒன்றெனெ இந்த ஆய்வு கூறுகின்றது (தமிழ்ச்செல்வன், 2019).

அடுத்து, மணிமேகலை - பூசாகோஅர என்பவர்கள் 2013ஆம் ஆண்டில் எண்வகை மெய்ப்பாடுகளை மையப்படுத்தி வளையாபதி காப்பியத்தில் உளவியில் என்ற தலைப்பில் ஆராய்ந்துள்ளனர். தொல்காப்பியர் மெய்ப்பாடுகளின் வாயிலாக உளவியலைப் பற்றி விளக்கியுள்ளார் என்பது இந்த ஆய்வின் முடிவாகும். எனவே, எண்வகை மெய்ப்பாட்டுக் கோட்பாட்டை வைத்து இந்த ஆய்வு ஆராயப்பட்டுள்ளது.

தொடர்ந்து, பவானி - மனோன்மணி தேவி (2021) இணைந்து தேன்கூடு கவிதைத் தொகுப்புச் சித்தரிக்கும் பல்லினச்சூழல்: தாக்கக் கோட்பாட்டின் வழி ஓர் ஆய்வு எனும் தலைப்பில் ஆராய்ந்துள்ளனர். இந்த ஆய்வு தேன்கூடு கவிதைத் தொகுப்பில் கவிஞர் அவர்களின் கவிதைகளில் வாழ்விடத் தாக்கம் குறித்து ஆராய்ந்துள்ளது. ஆக, இந்த ஆய்வு தேன்கூடு கவிதைத் தொகுப்பை மையப்படுத்தி நடத்தப்பட்டுள்ளது.

இறுதியாக, 2019ஆம் ஆண்டில் மனோன்மணி தேவி என்பவர் சீனி நைனா முகம்மது கவிதைகளில் திருக்குறளின் தாக்கம் எனும் தலைப்பில் ஆய்வு செய்துள்ளார். இந்த ஆய்வு தேன்கூடு கவிதைத் தொகுப்பை முன்னிறுத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் வழி தேன்கூடு கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகளில் திருக்குறளின் தாக்கம் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளார் (Manonmani, 2019).

## ஆய்வுக் கோட்பாடு

தொல்காப்பியத்தில் உள்ள எண்வகை மெய்ப்பாட்டுக் கோட்பாடு இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொருளதிகாரத்தில் பொருளியல் எனும் இயலில் இடம்பெற்றுள்ள

*நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று*
*அப்பா லெட்டாம் மெய்ப்பா டென்ப.*
*(தொல். பொருள். மெய். நூ. 147)*

என்ற நூற்பா உளவியல் சார்ந்த மனவுணர்வு விதியாகக் குறிக்கப்படுகின்றது. இந்நூற்பா நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம் வெகுளி உவகை என்ற எட்டு

வகை மனஉணர்ச்சியான மெய்ப்பாட்டினை விளக்குகின்றது(தமிழண்ணல். 2009). இந்த எண்வகை மெய்ப்பாடுகள் 32 இடங்களில் தோன்ற கூடியதாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார். மேலும், மெய்ப்பாடுகள் அனைத்தும் உள்ளத்து உணர்ச்சிகளை உடல் வழியாக வெளிப்படுத்த கூடியதாக உள்ளது. எனவே, தேன்கூடு கவிதைத் தொகுப்பில் இந்த எட்டு வகை மெய்ப்பாடும் வெளிப்படுகிறதா என்று ஆராயப்பட்டுள்ளது.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவைத் தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

### நகை

தொல்காப்பியர் இகழ்தல், இளமை, அறிவின்மை, மடமை என்ற நான்கு நிலைகளில், மனித உள்ளத்தில் நகை எனும் மெய்ப்பாடு தோன்றுகிறது என்று வரையறுத்துள்ளார். தெருவினிலே தமிழனென்றால் என்ற கவிதையில்,

*“வள்ளுவரே வந்தாலும் அவரே சொன்ன*

*வழியினிலே வாழ்வதிங்கே இயலா தென்றே*

*எள்ளுகின்ற தமிழரிங்கே இருந்தா லென்ன!*

*இல்லாமல் தாம்மடிந்து போனா லென்ன!”*

*[தேன்கூடு, ப.139]*

தவறான பாதையில் சென்று கொண்டிருக்கும் தமிழர்களைக் கவிஞர் எள்ளி நகையாண்டுள்ளார். தமிழ் மக்கள் அறியாமையுடைய போக்கினில் உள்ளார்கள் எனக் கூறும் வகையில் கவிதையில் தமிழ் மக்களை நிந்திக்கின்றார். ஆக, இக்கவிதையில் நகை என்ற மெய்ப்பாடு தோன்றியுள்ளது.

### அழுகை

அழுகை எனும் மெய்ப்பாடு மனத்தில் துன்பம்நிகழும்போதுநம்முடையஉடல்மொழி அழுகையின் வாயிலாக வெளிப்படுகிறது. தொல்காப்பியர் அழுகை மெய்ப்பாடு தோன்ற கூடிய நான்கு நிலைகளைக் குறிப்பிட்டுள்ளார்(மணிமேகலை - பூசாகோஅர, 2013). இழிவும், இழத்தலும், அசைதலும், வறுமையும் என்ற நான்கு நிலைகளில் அழுகை தோன்றும்.

*“காற்றில் நஞ்சையும் கடலில் கழிவையும்*

*கணக்கு வழக்கின்றி நிறைத்தான் அடர்*

*காட்டை அழித்ததில் காணும் விலங்கெலாம்*

*வேட்டை யாடியே ஒழித்தான்!*

*ஆற்றைச் சாய்கடை ஆக்கி உயிர்களை*

*அழிக்கும் நோய்களை வளர்த்தான் தன்*

*அறிவை நம்பியே, இறைவன் வழங்கிடும்*

*அருளின் போர்வையைக் கிழித்தான்!”*

*[தேன்கூடு, ப.27]*

என்ற கவிதையில் இயற்கை அன்னையைச் சேதப்படுத்தியும் விலங்குகளுக்கும் மனித உயிர்களுக்குப் பாதிப்பை உண்டாக்குகின்றனர் என்ற அடிப்படையில் இயற்கையை இழப்பதில் துன்பத்தை எதிர்நோக்கும் கவிஞர் இங்கே அழுகை எனும் இரண்டாவது மெய்ப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார். எனவே, இக்கவிதையில் அழுகை என்ற மெய்ப்பாடு தோன்றுகிறது.

### இளிவரல்

இளிவரல் என்பது வருத்த உணர்வினைக் குறிக்கின்றது. இந்த மூன்றாவது மெய்ப்பாடு மூப்பு, பிணி, வருத்தம், மென்மை முதலிய நான்கை வைத்தே தோன்றுகின்றது. இளிவரல் மெய்ப்பாட்டின் வழி இந்த நான்கு இடத்தையும் தொல்காப்பியர் வகுத்துள்ளார்.

*“தமிழாலே பிழைக்கின்ற தமிழேடு தினம்*

*தவறாமல் செய்யுதே தமிழ்க்கேடு*

*துமியேனும் அதற்கதில் வருத்தமில்லை யார்*

*சொன்னாலும் பிழைகளில் திருத்தமில்லை!*

*[தேன்கூடு, ப.64]*

மேற்காணும் கவிதையில், கவிஞர் அவர்கள் நாளிதழ், சஞ்சிகைகள் போன்ற தமிழேடுகளில் தொடர்ந்து நடந்து வரும் தமிழ் மொழிச் சிதைவை வருத்தத்தோடு கூறுகின்றார். மேலும், தமிழேடு நிறுவனங்களின் மீதும் அதன் உரிமையாளரின் மீதுமுள்ள வருத்தத்தையும் இதில் வெளிப்படுத்தியுள்ளார். ஆக, இந்தக் கவிதையில் இளிவரல் எனும் மெய்ப்பாடு தோன்றியுள்ளது.

**மருட்கை**

மருட்கை மெய்ப்பாடு என்பது வியப்புத் தன்மையைச் சார்ந்ததாகும். இந்த மருட்கை எனும் மெய்ப்பாடு புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்ற நான்கு இடங்களில் தோன்றுகிறது எனத் தொல்காப்பியர் கூறுகிறார்(மணிமேகலை - பூசாகோஅர, 2013).

*“மலைவிழுங்கும் அலையெழுந்து பலதடவை அன்று*

*நிலம்விழுங்க நேர்கையிலும் நெஞ்சிலுரம் கொண்டு*

*கலைவளமும் மொழிமரபும் காத்தஇனம் இன்று*

*நிலைதளர்ந்து மொழிமறந்து நின்றதடா இங்கு!*

*[தேன்கூடு, ப.49]*

என்ற கவிதையில் பல பேரிடர் வந்தபோதும் அழியாத தமிழ்மொழியை, இன்று கலைவளமும் மொழிமரபும் காத்த இனத்தின் வழிவந்த இளைஞர்கள், சிதைவுக்கு உள்ளாக்குகின்றனர். இதனால், தமிழ்மொழி சிறுமை படுத்தப்படுகிறது என்று வியப்போடு இக்கவிதையை எழுதியுள்ளார். எனவே, இந்தக் கவிதையில் இளிவரல் எனும் மெய்ப்பாடு தோன்றியுள்ளது.

**அச்சம்**

இவ்வகை மெய்ப்பாடு பிறராலும், பிற பொருளாலும் தோன்றும். தொல்காப்பியத்தில் இந்த மெய்ப்பாடு நான்கு இடத்தில் தோன்றும் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அது, தெய்வம், விலங்கு, கள்வர், அரசர் எனும் நால்வகையாலும் அச்சம் என்ற மெய்ப்பாடு தோன்றும். சான்றாக,

*“அரிதான கருணைமிகும் அன்னைநெஞ்சம் அருவருக்கும்*

*அற்பவிந்துத் துளியிலென்னை அற்புதமாய்ப் படைத்தவன்நீ*

*தெரியாத புறத்திருந்து திடுமென்று வருமிடர்கள்*

*தீண்டாமல் துணையிருந்து தினந்தினமும் தடுப்பவன்நீ*

*புரியாத பாவிசெய்யும் பொல்லாத பிழைகோடி*

*பொறுத்துனது பேரருளால் புகவாழ்வு கொடுப்பவன் நீ*

*வரையாத நின்கருணை வாழ்வெல்லாம் நிறைந்திருந்தும்*

*வழுவாமல் உனைப்புகழும் வகையறியேன் இறையோனே!”*

*[தேன்கூடு, ப.13]*

எனும் கவிதையில் கவிஞர் அவர்கள் இறை அச்சத்தைக் கவிதையில் நயம்பட உரைத்துள்ளார். இறைவன்தான் வாழ்வின் மூலம். அவருக்குப் பயந்து நடத்தல் வேண்டும். இறை அச்சத்தை வெளிப்படுத்தும் இக்கவிதையில் அச்ச மெய்ப்பாடு வெளிப்படுகின்றது.

**பெருமிதம்**

பெருமிதம் என்பது நாம் செய்யும் செயலின் மூலமாகக் கிடைக்கும் ஒன்றாகும். தொல்காப்பியர், பெருமிதம் எனும் மெய்ப்பாடானது கல்விச் சிறப்பு, தறுகண்மை, புகழ்மை, கொடைத் தன்மை எனும் கூறப்பட்ட நான்கு வகையாலும் உண்டாகும் என்கிறார். எடுத்துக்காட்டாக,

*“செம்மொழி யாவினும் செம்மொழி எம்மொழி?*

*செந்தமிழ் தானடியோ!*

*இம்மொழி எம்மொழி என்கையில் எம்மனம்*

*ஏறுது வானடியோ!*

*[தேன்கூடு, ப.53]*

செம்மொழிகளில் ஒன்றான தமிழ்மொழியை ஆழமாகவும் செறிவாகவும் கற்றதில் இக்கவிஞருக்குப் பெருமிதம் ஏற்படுள்ளது. இதை மேற்காணும் கவிதை காட்டுகின்றது. கற்ற கல்வியால் எப்போதும் நமக்கு நன்மைதான் கிடைக்கும். மேலும், தமிழின் புகழ்மையையும் இக்கவிதையில் கவிஞர் வெளியிட்டுள்ளார். பெருமிதம் எனும் மெய்ப்பாடு கல்விச் சிறப்பும் புகழ்மையும் எனும் இடத்தில் தோன்றுகிறது. ஆகவே, இக்கவிதையில் பெருமித மெய்ப்பாடு வெளிப்படுகின்றது.

## வெகுளி

வெகுளி வெறுப்பினால் பிறப்பது ஆகும். உறுப்புகளைக் குறைத்தல், குடிப்பிறப்பிற்குக் கோள் சூழ்தல், கோல் கொண்டலைதல், கொலைக்கு ஒருப்படுதல் என்ற நால்வகைப் பொருண்மையியலில் தொல்காப்பியர் விளக்குகின்றார். சான்றாக,

*"பாஅ சிவமே! பாஅ சிவமே!*

*காஅற் றுலவும் களிமண் குடமே!*

*பட்டம் பெற்றதால் சட்டஅம் கற்பதால்*

*எட்டுச் சித்தையும் எட்டி விட்டதாய்க்*

*கெட்ட கனவிலே கிளிர்ந்த திமிரிலே*

*நட்டுக் கொண்டதோ நடுத்தலை முடிதான்!..."*

*[தேன்கூடு, ப.61]*

எனும் கவிதை கவிஞரின் வெகுளி மெய்ப்பாட்டைக் காட்டுகின்றது. தமிழ் மரபுக்குத் தீங்கு செய்து வந்த ஒருவரைக் கண்ட கவிஞருக்கு வெறுப்பு உண்டாகியுள்ளது. இதனால், கவிஞர் கோப உணர்வும் வெறுப்புக் கலந்த பார்வையும் கவிதைகளில் தெரிகின்றது. எனவே, இந்தக் கவிதையில் வெகுளி மெய்ப்பாடு வெளிப்படுகின்றது.

## உவகை

உவகை என்பது மனத்தில் தோன்றும் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகும். உவகை என்னும் மெய்ப்பாடு துன்பத்தை விலக்கிச் செல்வ நுகர்ச்சி, ஐம்புலன்களான் நுகர்தல், காமநுகர்ச்சி, விளையாட்டு ஆகிய நான்கு நிலைகளிலும் உண்டாகும் எனத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். சான்றாக,

*"ஏங்கி விடும்மூச்சில் நீங்கிய மேலாடை*

*ஏற்றிய இன்ப மோகத்தால் மது*

*தேங்கும் இதழ்களில் தீயெனப் பாய்ந்தனன்*

*சேல்விழி சாயச் சுகத்தால்!*

*கொள்ளைகொள்ளை இன்பம் கொள்ளைஎன் றேயங்குக்*

*கூக்குரல் இட்டது சேலை குற்றம்*

*இல்லையில்லை அவள் என்னுரிமை என்றே*

*இன்னும் துணிந்தனன் காளை..."*

*[தேன்கூடு, ப.116]*

மேற்காணும் கவிதையின் வழி காதலன் தன் காதலியுடன் இன்புற்று, அவளது மென்மையை அறிந்து, இளமையைப் புணர்ந்து, நறுமணத்தை நுகர்ந்து, குளிர்ச்சியை உண்டு அவளது அழகினை உயிர்த்து, வருணிக்க வார்த்தைகளே இல்லை எனக் காதலன் காதலியை ஐம்புலன்களால் உய்த்து உணர்ந்து வெளிப்பட்டுள்ளதால் இக்கவிதை உவகை எனும் மெய்ப்பாட்டினைக் கொண்டுள்ளது.

## நிறைவுரை

கவிஞர் செ. சீனி நைனா முகம்மது சிந்தனைகள் பல நிலையில் விரிந்து படர்ந்துள்ள நிலையை அவரது 'தேன்கூடு' தமிழ்க்கவிதைத் தொகுப்புக் காட்டுகின்றது. இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் மரபு மீறாமல் எழுதப்பட்டதோடில்லாமல் படிப்பவர்களுக்குப் உளவியல் கருத்துகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துகின்றது. அவ்வகையில் கவிஞர் செ. சீனி நைனா முகம்மதின் தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் கவிதைகள் எண்வகை மெய்ப்பாட்டோடு திகழ்வதை இவ்வாய்வுக் கட்டுரை காட்டுகின்றது.

## References

Bavani, A., & Manonmani Devi, A. (2021). Multiculturalism as depicted in Theenkoodu Poetry Collection: A Study of Influence Theory. Journal of Tamil Peraivu, 10(1), 68-75.

Cīṉi Naiṉā Mukammatu, Ce. (2014). Tēṉkūṭu. Piṉāṅku: Uṅkaḷkural Niṟuvaṉam. *[சீனி நைனா முகம்மது, செ. (2014). தேன்கூடு. பினாங்கு: உங்கள்குரல் நிறுவனம்.]*

Maṇimēkalai, Pa., & Pūcākō'ara, Ki. 2013. Vaḷaiyāpati Kāppiyattil Uḷaviyal. Kalanjiyam - International Journal Of Tamil Studies (Kaḷañciyam – Paṉṉāṭṭut Tamiḻ Āyvitaḻ). *[மணிமேகலை, ப., - பூசாகோஅர, கி. 2013. வளையாபதி காப்பியத்தில் உளவியல்.*

Kalanjiyam - International Journal of Tamil Studies *(களஞ்சியம் பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்).]*

Maṉōṉmaṇi Tēvi, A. (2017). Tēṉkūṭu Kavitait Tokuppil Paṉmukappārvai. Ilakkiya Āyvil Oru Tumi! (Ilakkiya Āyvuk Kaṭṭuraikaḷ), 63-77.*[மனோன்மணி தேவி, அ. (2017). தேன்கூடு கவிதைத் தொகுப்பில் பன்முகப்பார்வை. இலக்கிய ஆய்வில் ஒரு துமி!( இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள்), 6377.]*

Manonmani, A. (2019). The influence of Thirukkural in Seeni Naina Muhammad's Poems. Journal of Tamil Peraivu, 8(1), 94-103.

Samikkanu Jabamoney, I. S., &Rajantheran, M. (2020). The Growth of Tamil Poetry in Malaysia. Chennai: Sakthi Printers.

Tamiḻaṇṇal. (2009). Tolkāppiyam. Maturai: Mīṉāṭci Puttaka Nilaiyam. *[தமிழண்ணல். (2009). தொல்காப்பியம். மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.]*

Tamiḻccelvaṉ, Ka. (2019). Eṇ Vakai Meyppāṭukaḷ. Cāṉlāks Paṉṉāṭṭut Tamiḻiyal Āyvitaḻ, 8-15. *[தமிழ்ச்செல்வன், க. (2019). எண் வகை மெய்ப்பாடுகள். சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், 815.]*